5. விதி 111-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை
துணைவினாக்களுக்கு அளிக்கப் பெற்ற விடைகளுக்கு திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-இன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

"கடந்த 31-10-1989 அன்று சட்டப் பேரவையில் வினா எண். 1 (உடுக்குறியிட்ட வினா எண். 3261) தொடர்பான துணை வினாக்களுக்கு அளித்த பதிலில் கீழ்க்கண்ட திருத்தங்களை அளிக்க விரும்புகின்றேன்.

உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்பட வேண்டிய பகுதி:

இருக்கின்ற பகுதி:

'இது நிரந்தரமாக பணியில் இருப்பவர்களுக்குத் தரப்படுகிறது. இது நிரந்தரமாகத் தரப்படவேண்டும் என்பதற்காகத்தான் நிரந்தரமாக இல்லாதவர்களுக்குத் தரப்பட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்பதாகும்.

திருத்திய பதில்:

'பகுதி நேரப் பணியாளர், தினக் கூலிப் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் பணியில் நியமிக்கப்படுபவர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வோர் போன்ற நிரந்தரம் இல்லாத பணியாளர்களைக் கருத்தில் கொண்டுதான் நிரந்தரமாக இல்லாதவர்களுக்கு இது தரப்பட இயலாது என்று சொல்லப்பட்டது. ஆகவே, இத்திட்டம் தற்காலிகமாகப் பணியாற்றும் முழுநேரப் பணியாளர்களுக்கும், முழு நேர சில்லறைச் செலவினப் பணியாளர்களுக்கும் உண்டு.'

உறுப்பினர் திரு. ஆர். சாமிநாதன் அவர்களுடைய துணைக் கேள்விக்கு அளித்த பதிலில், திருத்தப்பட வேண்டிய பகுதி:

இருக்கின்ற பகுதி:

'நிரந்தரப் பணியாளர்களுக்கு, மாத்திரம்தான் இத்திட்டம்' என்பது.

திருத்திய பதில் :

பகுதி நேரப் பணியாளர், தினக் கூலிப் பணியாளர், ஓய்வு பெற்று பின்னர் மீண்டும் பணியில் நியமிக்கப்படுபவர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வோர் போன்ற நிரந்தரமற்ற பணியாளர்களுக்கு இத்திட்டம் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டுதான் நிரந்தரப் பணியாளர்களுக்கு மாத்திரம்தான் இந்தத் திட்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால், தற்காலிகமாகப் பணியாற்றும் முழு நேரப் பணியாளர்களுக்கும், முழு நேர சில்லறைச் செலவினப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் உண்டு.

திருமதி பொன்னம்மாள் அவர்களின் துணைக் கேள்விக்கு அளித்த பதிலிலும் திருத்திய பதில் :

'தற்காலிக முழு நேர ஊழியர்களுக்கும் இந்தக் குடும்ப நல நிதித் திட்டம் பொருந்துமாதலால், இத்திட்டத்திற்காக யாரும் நிரந்தரமாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை', என்று திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, அத்துடன் நேற்றையதினம் என்னுடைய அறிவிப்புகளில், மாணவர்களுக்கான பஸ் கட்டணச் சலுகையில், 'மேலும் தற்போது சென்னையிலும், கன்னியாகுமரியிலும் உள்ள 50 சதவிகித சலுகைக் கட்டணம் தமிழகமெங்கும் விரிவாக்கப்படும்' என்று சொன்னபோது, இதனால் உயர்நிலைப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே பயிலும் மாணவ-மாணவியர்களுக்குக் கூடுதல், சலுகை கிடைக்கும் என்று சொன்னேன். அதில் கல்லூரியை இணைக்கவில்லை. அதையும் இணைத்துக்கொள்ள வேண்டும். 'இதனால் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே பயிலும் மாணவ-மாணவியர்களுக்குக் கூடுதல் சலுகை கிடைக்கும்' என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

6. கவன ஈர்ப்பு

கரும்புக்கு நியாய விலை கிடைக்காததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ஏ. மணி, குமரி அனந்தன், எச். எம். ராஜு, எஸ். எஸ். ராமசுப்பு, எஸ். டி. உகம்சந்த், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.